425

பதிவுஎண் —M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தா

குருகுலம்

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–4 குருகுலம், மாம்பாக்கம்; கர, பங்குனி; 11—4—52. தளிர்–28

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் மொழிப்பது

வகை தெரிந்த வாழ்க்கை

பொதுவாக வாழ்க்கையில் எல்லார்க்கும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றால் தெரியும். ஆனால், அவற்றால் அவர்கள் ஓரளவு இன்பமோ துன்பமோ அடைவதோடு நின்றுவிடுகிறார்கள்.

சுவை முதலிய அந்த ஐந்தும் என்ன? அவை எதற்காக அமைந்திருக்கின்றன? அவை எவற்றிலிருந்து தோன்றின? சுவை முதலியவற்றிலிருந்து வேறு எவை யெவை தோன்றுகின்றன? ஒன்றுக்கொன்று என்ன தொடர்பு? என இவற்றைப்பற்றி யெல்லாம் பொதுமக்கள் எண்ணிப் பார்ப்பதுமில்லை; பார்த்து, அதற்கேற்றபடி வாழ்க்கை நடத்துவதுமில்லை.

ஆனால், மெய்யறிவு மிக்க சிறப்பு மக்களாகிய பெரியோர்கள், சுவை முதலிய ஐந்தின் வகைகளை நுட்ப நிட்பமாக எண்ணிப் பார்க்கிறார்கள்; அதிலிருந்து பல கருத்துக்களை ஆராய்ந்து அடிப்படை உண்மைகளைத் தெளிந்துகொள்கிறார்கள். அதனால், வாழ்க்கையை அவர்கள் இயற்கையோடு ஒத்த மெய் வாழ்க்கையாக நடத்த முடிகிறது.

குழந்தை பிறந்தவுடன் சுவைக்கத் தெரிந்து கொள்கிறது; பின்பு பார்க்கவும் அதற்குத் தெரிகிறது. சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் தெரிந்த பின்பு, வாழ்க்கை வளர்ச்சியின் பல்வேறு வகைகளும் அதற்குப் பெருகி வருகின்றன. நல்லொழுக்கமும், மெய்யறிவும் கைவந்த சான்றோர்களானபின், அவர்கள், அவற்றின் விரிவுகளையும், அடிப்படைகளையும் நன்கறிந்து மேன்மேலும் உயர்தரமான வாழ்க்கையை நடத்துகிறார்கள். அதனால், உலகத்தைப் பயன் கொள்ளவும், தம் கருத்துப்படி உலகத்தை நடத்தவும், பிறர்க்குப் பயன் உண்டாக்கவும் அவர்களுக்கு முடிகின்றது.

சுவை முதலிய ஐந்தின் வகை தெரிவான் கண்ணதே உலகம் என்று 'திருவள்ளுவர்' தெரிவிப்பதனால், இவ் வகை தெரியாமல் மற்றவைகள் ஆயிரமாயிரம் தெரிந்தாலும் உலகம் அவர் வழியதாகாது என்பதும் தெளிவாகின்றது. மேலும், சுவை முதலியவற்றை அடக்குவதைவிட, நன்முறையில் அதன் வகை தெரிந்து நடப்பதே பெரியோர் ஒழுக்கம் என்பதும் இதிலிருந்து துணியப்படும்.

சுவையொளி யூரோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் வகை—சுவை முதலிய ஐந்து புலன்களின் வகைகளை, தெரிவான் கட்டே உலகு—ஆராய்ந்து தெளிவானிடத்ததே உலகம்.

உலகம் அப் பெரியோனுக்கே நன்றாய்ப் பயன்படுகின்றது என்றபடி; எனவே, உலகம் அப் பெரியோன் வழியே நன்கு இயங்கிச் செல்லும் முறைமையும் பெறுகின்றது என்பது துணியப்படும்.

சுவை முதலிய ஐந்தைக் கூறினார், பழக்கத்தில் எல்லார்க்கும் தெரிந்தவையாய் நுகர் புலனாய் இருத்தலின். ஐந்தின் வகை என்றார், அவற்றிலிருந்து மண் முதலிய ஐம் முதற் பொருள்களும் அவற்றின் கூறுகளும் வகைப்பட்டுத் தோன்றுதலாலும், ஆராய்ச்சி அவற்றிலிருந்து பருமையிலும் நுட்பத்திலும் விரிவடைதலாலும் என்க.

உலகு என்றது, இரு தினை யுலகங்களையுங் குறிக்கும். பிறர்க்கும் தமக்கும் உலகத்தை இயக்கிப் பயனுக்குதற்கு, சுவை முதலியவற்றை வகை தெரிந்து தெளிவுடன் கொள்ள வேண்டியிருத்தலின், இவ்வாறு கூறினார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்

(5-10-51 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கூலை	கர, பங்குனி	தளிர்
4	11-4-52 வெள்ளி	28

உழைப்பின் அளவும் - - சமுதாயத் தேவையும்

நெல்லை அரக்கால் கொண்டும், துணியைக் கஜக்கோல் கொண்டும், பிறவற்றைத் தூக்கு களைகளைக் கொண்டும் நாம் அளந்தறிகிறோம். அது போலவே பண்டங்களுடே விரவி நின்று பண்டங்களின் மதிப்பைப் புலப்படுத்தும் தன்மை வாய்ந்த உழைப்பையும் நாம் அளந்தறிய முடியும்; அதை அளத்தற் குரிய கருவி காலம் என்பதுதான். ஒரு பண்டத்தைச் செய்து முடிக்க ஒரு மனிதனுக்கு ஐந்து மணி நேரம் ஆயிற்று என்பதைக் கொண்டு, அப் பண்டம் ஒரு மனிதனின் ஐந்து மணி நேர உழைப்பினைத் தன்னுள் கொண்டுள்ளது என்பது விளங்கும்.

இதற்கு இன்னும் கொஞ்சம் விளக்கம் தேவைப்படுகிறது. ஒரு சோம்பேரி அல்லது மூட்டாள் அதே பொருளைச் செய்யப் பத்து மணி நேரம் பிடிக்கலாம். அதுகாலை, அதே பொருள் ஒரு மனிதனின் (சோம்பேரியின்—மூட்டாளின்) பத்து மணி நேர உழைப்பினைத் தன்னுள் கொண்டுள்ள காரணத்தினால் முன்னால் கூறியதை விட இரண்டு மடங்கு அதிக மதிப்புடையதாகி விடாதா? நீண்டகாலம் பணியாற்றி முடித்த ஒன்று தன்னிடம் நீண்டநேர உழைப்பினைப் பொதிந்திருப்பதின் மூலமாக—அதிக உழைப்பு என்ற காரணத்தால்—அதிக மதிப்பெய்தலாம். திறன் உடையவன் விரைவில் முடிக்க—குறைந்த உழைப்பு என்ற காரணத்தால்—அப் பொருள் குறைந்த மதிப்பன்றோ எய்தும்? இது நியாயமா? என்னும் கேள்விகள் இயற்கையாகவே எழும்.

சென்ற கட்டுரையில் நாம் சுட்டிக் காட்டியபடி தச்சன் கருமான் கொல்லன் முதலிய தொழில் வல்லுநர்களின் உழைப்பு எல்லாப் பண்டங்களுடும் பொதுவாக நிற்கக்கூடியதன்று; எனவே பொதுவான மனித உழைப் பென்பதே யாவற்றுடும் விரவி நிற்கக் கூடியது என்று கூறியுள்ளோம். அதுவுமன்றி உழைப்பின் அளவினை, பணி செய்யும் மக்களில் ஒரு தனிப்பட்ட தன்மை உடையவர்களைப் பற்றி மட்டுமே கொண்டு, நாம் கணிக்க முயன்றால் நிச்சயமாக, நமக்கு அது விளக்க முறுதி தப்புக் கணக்குப் போட்டவர்களாவோம். நாம் இப்போது கூறுவ தனைத்தும் ஒரு தனிப் பட்டவரின் வேலையைப் பற்றியல்ல; மக்கள் இனத்தின்—மன்பதையின், பொது உழைப்பைப் பற்றி; வேலைப் பாட்டில் பண்டத்தில், பொதிந்துள்ள சராசரி மனித உழைப்பைப் பற்றியே ஆகும். ஒரு பொருளின் உழைப்பை வரையறுப்பது அதைத் தோற்றுவிக்கத் தேவைப் பட்ட அதன் சமுதாய சராசரி மனித உழைப்பே ஆகும்.

தேவைப்பட்ட சமுதாய (மன்பதை) சராசரி மனித உழைப் பென்பது யாது? மன்பதைக்குப் பொதுவான இலாபத்தை நல்கக் கூடிய முறையில், சராசரித் திறனோடும் சுவனத்தோடும் செய்தால், ஒரு பண்டத்தைச் செய்து முடிக்கச் செலவிடும் நேரம் எதுவோ அதுதான் தேவைப்பட்ட சமுதாய (மன்பதை) சராசரி மனித உழைப் பென்பது ஆகும். மற்றும் அப் பண்டத்தைச் செய்யச் செலவிடும் நேரமும் அதன் நிரந்தரமான உற்பத்திக் காலத்தைக் கொண்டே கணக்கிடப் படும்.

காட்டாக, ஒரு பண்டத்தைச் செய்ய ஒரு மனிதனுக்கு ஒரு மணி நேரம் ஆகிறது. அதே பண்டத்தை அரைமணியில் செய்து முடிக்கத் தக்க ஒரு பொறியை ஒருவன் கண்டு பிடித்துப் பின்னர் அது சமுதாய முறையில் ஏற்றுக் கொண்ட பிறகுங்கூட முன்னர்க் கூறப்பட்ட மனிதன் பழைய மாதிரியிலேயே ஒரு மணி நேரம் செலவு செய்து மேற் கூறிய பண்டத்தைச் செய்வானால் அவன் பின்னால் கூறப் பட்ட பொறியின் மூலமாகச் செய்யும் அதே பொருளுக்குச்

செலவிடப்படும் காலத்தைக் காட்டிலும் இரு மடங்கு அதிகமான காலம் கொள்ளுகிறான் என்பதாகிறது. சமுதாயத்திற்குத் தேவைப் படுவது, உழைப்பைக் குறைப்பது ஊதியம் அதிகப் படுவது. ஒவ்வொரு வரும் குறைவாக உழைத்து அதிகப்பயன் அடையவே விரும்புகின்றனர். இந்த முறையில் உழைப்பு நேரத்தை மிகுதியும் குறைத்துப் பண்ட உற்பத்தியை அதிகப்படுத்தும் ஒரு பொறி கண்டு பிடிக்கப்பட்ட பிறகும், அந்தப் பொறியின் மூலமாகச் செய்யும் பொருள் போன்ற ஒன்றையே ஒருவன் பழைய பாணியிலேயே செய்தால் சமுதாயத்திற்குத் தேவைப் படுவதான அரைமணி கால உற்பத்தியைப் புறக் கணித்து இரட்டை நேரத்தில் அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்கிறான். எனவே முதல் கூறப்பட்டவனின் ஒரு மணி கால உழைப்புப் பின்னால் கூறப்பட்டவனின் (சமுதாயத்திற்குத் தேவைப் படுபவன்) அரை மணி நேர உழைப்புக்குச் சமம் என்பது நன்கு விளங்கும்.

இந்த முறையிலேதான் சமுதாயத்திற்குத் தேவைப் பட்ட சராசரி மனித உழைப்பு ஒரு பண்டத்தில் எவ்வளவு அடங்கியுள்ள தென்பதை அறிந்து கொள்ளவேண்டும். எவ்வளவென்று கூறுவதே அதன் மதிப்பை உணர்த்துகின்ற தென்றும் முன்னர் உணர்ந்தோம்.

பொதுவாகக் கூறுமிடத்து ஒவ்வொரு பொருளும் அதனதன் பகுப்புக் கேற்றபடி மதிப்பை உடையதே. சமகால உழைப்பு, வேறு வகைப்பட்ட இரு பொருள்களில் காணப்பட்டால், அவற்றின் மதிப்பும் தம்முள் ஒத்ததேயாகும், (ஒத்திருக்கவே வேண்டும்); வேறுபட்டிருக்குமானால் அது மூலப் பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கும் அளவினை ஒத்து வேறுபட்டிருக்கலாமேயன்றி உழைப்பின் மூலமான எற்றத் தாழ்வாக இருக்கமுடியாது. அதுவு மன்றி இரண்டு பண்டங்களிடையே நாம் கூறும் ஏற்றத் தாழ்வுகள். அவை இரண்டிடைப்பொதிந்துள்ள சமுதாயத்தால் தேவைப்பட்ட கால அளவையின் ஏற்றத் தாழ்வினைக் கொண்டே கூறுவதாகும். ஆகவே, பண்டம் என்பது மதிப்பைப் (**Value**) பற்றியவரை (கொள்விலை விற்கும் விலைகளைப் பற்றியல்ல) சமுதாயத்திற்குத் தேவைப்பட்ட சராசரி மனித உழைப்புத் தன்னுள் பொதிந்துள்ள — அடங்கியுள்ள — ஒரு கூடு போன்றதே யாகும்.

எவ்வகைப் பட்ட பண்டத்தின் மதிப்பும் அதை உற்பத்தி செய்யச் செலவிடும் கால அளவை வேறுபடாதிருக்கும் வரையில் மாறுதல் அடையாமலேயே இருக்கும். ஆனால் அப் பண்டத்தின் உற்பத்திப் பெருக்கத்தில் மாறுதல் உண்டானால் உடனே அதனுடைய உழைப்பு நேரத்திலும் மாறுதல் உண்டாகின்றது. அதன் மதிப்பும் மாற்றம் அடைகின்றது. எனவே ஒரு பொருளை உற்பத்தி செய்யத் தேவைப்படும் உழைப்பென்பது ஒரு தொழிலாளியின் ஒரு சராசரி திறன் உபயோகிக்கும் பொறியின் தன்மை, சமுதாயத்தின் அமைப்பு முறை, நாட்டின் தட்ப வெப்ப நிலை இவையாவற்றையும் உள்ளிட்டதேயாகும்.

இறுதியாக, இத்தகைய எந்த ஒரு பண்டமும் உபயோக மதிப்பு அற்றதானால் — சமுதாயத்திற்குத் தேவையற்றதானால், அதற்கு யாதொரு மதிப்பும் இல்லாமல் போய்விடுகிறது. மேற்கூறிய மனித உழைப்பைத் தன்னுள் அடக்கியுள்ள பண்டமும் தன் உபயோக மதிப்பை இழந்து விட்டால் அதற்குச் செலவழித்த நேரம் வீண் என்றாகிறது. இத்தகைய உழைப்பை நாம் கணக்கிடவோ அல்லது அதற்கு நாம் மதிப்பளிக்கவோ இயலாது.

—நலங்கிள்ளி.

தருதலக் கைத்தறிகளில்
நெய்த
மேல் துட்டைகள்
(டவல்கள்)

முறுக்கு நூலால் ஆனவை!
தூய்மையான சலவை!
கெட்டியான சாயம்!
அழகிய கரைகள்!

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

அளவுகள்: 24"X48"
26"X52"
28"X54"
30"X60"

வணிகர்க்கு,
தக்க கழிவுகள் உண்டு!
தருதலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.

சிலப்பதிகாரம்

25. கண்ணகியின் ஏவல் மொழி

'முத்துசாமி'

"பட்டாங்கி யானு மோர் பத்தினியே யாமாகில் ஒட்டே னரைசோடு ஒழிப்பேன் மதுரை யும்" என்று கண்ணகி சூள் கூறினமையை முன்னர்க் கண் டோம்.

மேலும் அவள், "நான்மாடக் கூடல் என்று பெயர் பெற்று விளங்கும் மதுரைமா நகரிலுள்ள பத்தினிப் பெண்டிர்களே! ஆட வர்களே! தேவர்களே! தவ சிலர்களே! யான் கூறுவ தனைக் கேளுங்கள். நெறி முறை யறியாமல் என் னருயிர்க் காத லனைக் கொலை செய்து பெருந் தவறிழைத்தான் மன்னன். ஆதலால் அவன் நகர் மீதும் சிற்றங் கொண்டேன்; யான் குற்றமிலேன்," என்று கூறி மதுரையை வலமாக மூன்று முறை வந்து தன் இடக் கொங் கையைத் திருகி யெறிந்தாள்.

அவ்வா றெறிந்த அளவிலே அங்கியங் கடவுள் அவள் முன் தோன்றி "மா பத்தினி! நினக் குத் தவறிழைத்த நாளில் இந் நகரை எரிக்குமாறு பண்டே ஓர் ஏவல் பெற்றுளேன். இவ் விடத்தில் பிழைத்தற் குரியோர் யார்?" என்று கேட்கக் கண்ணகி,

"பார்ப்பா ரறவோர் பசுப்பத்
தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி
யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க,..."

என்று ஏவினள்.

பார்ப்பார், அறவோர், பசு, பத் தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி யென்ற இவரைத் தவிர்த் துத் தீத்திறத்தார் பக்கம் சேர்க என்றவுடனே பார்ப்பார் முதலா கக் கூறியவர்கள் நற்றிறத்தோர் என்றும் ஏனையோர் தீத்திறத் தோர் என்றும் தெரிகிறது.

தீத் திறத்தாரை ஒறுத்தல் அரசன் கடமை. அவன் நெறி முறையினின்றும் வழுவின னை மையின் தானே ஒறுக்க முற் பட்டாள் போலும்! கொதி யழற் சீற்றத்தோடே சூளுரைக் கும் நேரத்திலும் நல்லோர் மாட் டுக் கருணை கொண்ட அவளது மேன்மை யுள்ளத்தைக் காண்க.

எனைய தெய்வங்களைத் தொழாது தன் கணவனையே வழிபட்டு நிற்கும் பத்தினிப் பெண்டிர்க்குத் தேவரும் ஏவல் செய்வர் எனபது இதனால் தெரி கிறது. ஏனையோர்க்குத் தேவர் களைக் காணலே அரிது. இவள் கண்டதோ டல்லாமல் கட்டளை யிடவும் ஆற்றல் பெற்றிருந் தனள்! என்னே கற்பின் பெருமை!

ஒரு சிலர் பார்ப்பார் என்ற சொல்லைக் கேட்டதும் பதை பதைக்கின்றனர்; அந்தணர் என்றவுடனேயே அலறுகின்ற னர். காரணம் பார்ப்பார் அந்த ணர் என்போர் ஆரியர் என்றும் அன்னியர் என்றும் நம்மை அடிமைப் படுத்தியவர் என்றும் எண்ணுகின்றனர். ஆரியர் என்ற வகுப்பார் அன்னியர் என்பது உண்மை; நம்மை அடி மைப் படுத்தியவர் என்பதும் ஓரளவு உண்மையே. ஆனால் பார்ப்பார் என்றும் அந்தணர் என்றும் நம் முன்னோர் நூல் களிற் சிறப்பித்து வழங்கப்படு பவர் ஆரியராகிய அன்னியர் அன்றென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. ஆரியர் வருவதற்கு முன்னமேயே நம்மில் அந்தணர் உண்டு, பார்ப்பார் உண்டு. பற்றற்ற துறவிகளாய் எவ்வுயி ரிடத்தும் செந்தண்மை (இரக் கம்) பூண்டொழுகுபவர் அந்த ணர்; மந்திர காரியங்களைப் பார்ப்பவர் பார்ப்பார். அவர் களை மக்கள் பெரிதும் மதித்து வந்ததோடல்லாமல் அவர்கள் ஆணைப்படியும் நடந்து வந்தனர். அவ்வளவு சிறப்பு அந்தணர்க் கும் பார்ப்பாருக்கும் இருப் பதை யறிந்து வெள்ளை யிருந்து வந்த ஆரியர்களும் தம்மை அந்தணர் என்றும் பார்ப்பார் என்றும் அழைத்துக் கொண்ட னர். ஆரியர்கள் தங்களை யவ் வாறு வழங்கிவர நாளடைவில் யார் உண்மையான தமிழந்த ணர் தமிழ்ப் பார்ப்பார் என்று பிரித்தறிய இயலாது போய் விட்டது.

அங்ஙனந் தமிழந்தணர் யாரென்றும் தமிழ்ப் பார்ப்பார் யாரென்றும் பிரித்தறிய மக்க ளிற் பலருக்கு இயலாது போயி னும் நுண்ணிய ஆராய்ச்சியாள ரிற் சிலர் பிரித்தறிந்து கூறி

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

வருகின்றனர். ஆனால் அத் தகையோர் கூற்றை உண்மை யென்று கொள்ளாமல் ஆரியச் சூழ்ச்சியில் மயங்கிக் கூறுவதா கப் புறக்கணிக்கின்றனர்.

பிரித்தறிய மாட்டாதாரும் பிரித்தறிந்து கூறும் அறிவுடை யோர் ஆய்வுரையில் ஐயங் கொள்வோரும் சாதி சமயச் சழக்குகளுக்கு அப்பாற்பட்டு உலகுக்கே ஒரு தனி நூலாய் விளங்கும் திருக்குறளில் "மறப் பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" என்று வரும் குறளைக் கண்டு பொருமாய், திருக்குறளும் ஆரியச் சூழ்ச்சி யில் சிக்குண்ட நூலே என்று கூசாது கூறுவர். திருக் குறளையே இங்ஙனங் கூறுபவர் திருத் தொண்டர் புராணத்துக்கு முதல் நூலாய் விளங்கும் திருத் தொண்டத் தொகையில் முதற் கண் "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடி யேன்" என்று வரும் அடியைக் கண்டு பொருமாய் அதனை ஆரிய வயப் பட்ட நூல் என்பதில் வியப் பில்லையன்றோ?

மந்திரங்களே மனப்பாடம் பண்ணிக்கொண்டு உச்சரித்து வருகையில் ஒருவன் சிறி துறந்து விடுவானாயின் பறுபடியும் கற்றுத் திருத்திக் கொள்ளலாம். மறந்த பொழுது திருத்திக் கொள்ளுதல் யாவர்க்கும் பொதுவேயாயினும், கற்பவை யிற் சிறந்தது மந்திரமே யானமை யானும் அதனைக் கற்றுச்சரிப்பார் பார்ப்பார் எனப்படுவா ரானமை யானும் ஈண்டு அக் குறளில் பார்ப்பாரைக் கூறினர். மந்திரங்களே மறவா தோதும் பார்ப்பாரே மறந்தன ராயின் மறுபடியும் திருத்திக் கொள்ளலாம் என்றமையால் எனையோர் ஏனைய நூல்களை மறந்தால் திருத்திக் கொள்ளு தல் தானே பெறப்படும். கல்வி யினும் ஒழுக்கம் சிறந்த தான மையின் கல்வியை மறந்தாலும் கற்றுக் கொள்ளலாம் என்றும் ஒழுக்கம் கெடக் குல உயர்வு கெடும் எனவும் கூறினர். இக் குறளில் வடக்கேயிருந்து வந்த ஆரியரைப் பார்ப்பார் என்ற சொல் எங்ஙனம் குறிக்கும்?

அது போலவே 'தில்லை வாழந்தணர்' திருத் தொண்டத் தொகையில் குறிப்பிட்டிருப் போரை எங்ஙனம் ஆரியர் என்று துணிந்தனரோ? தில்லை யென் பது தமிழ் நாட்டிலுள்ள சிதம் பரம் என வழங்கும் ஊர். அங்கு வாழும் அந்தணர் என் றதனாலேயே அவர்கள் தமிழ் நாட்டிலுள்ள ஒரு ஊரைச் சேர்ந்தவர் என்று தெரிய வில்லையா? தமிழ் நாட்டுக்கு வடக்கே யுள்ள ஒரு ஊரைச் சொல்லி அங்கு வாழும் அந்த ணர் என்று கூறியிருப்பின் ஒரு கால் ஆரியர் என்று துணியலாம். 'தில்லை வாழந்தணர்' என் று தெளிவாகக் கூறியிருக்கும் போது ஆரியர் என்று எங்ஙனம் துணிய முடியும்? இனி "வாழ் அந்தணர்" என்பதை வினைத் தொகை யென்பர் இலக்கணத் தில். வினைத்தொகை முக் காலத் துக்கும் பொது. ஆகவே எக்காலத்தும் அங்கு வாழ்பவர் என்று பெறப்படும்போது வடக்கே இருந்து வந்த ஆரிய ரைக் குறித்ததாக எப்படிக் கூற முடியும்? 'வந்து வாழ் அந்தணர்' என்று கூறவில்லையே. அங் ஙனம் கூறியிருந்தால் வடக்கே யிருந்து வந்து அங்குத் தங்கி வாழ்ந்தவர் என்று பொருள் கொள்ளலாம்.

திருக் குறள் திருத்தொண்டத் தொகை இவற்றில் ஐயங் கொண்டது போலவே கண்ணகி அங்கியங் கடவுளுக்குக் கூறிய மேற்காட்டிய ஏவல் மொழி யிலும் ஐயங்கொள்கின்றனர். உண்மை துணிய வல்லார் ஆய்ந்து துணிக.

மந்திர காரியங்களைப் பார்ப் பவர் நல்லவர் ஆனமையான் நல்லாரோடு சேர்த்துக் கூறி னள். அவர்களில் யாரேனும் மந்திர காரியம் பார்க்கும் ஒழுக் கத்தில் வழுவினால் "ஒழுக்கங் குன்றக் கெடும்" என்று திரு வள்ளுவர் கூறியாங்குக் கெட்ட வர் என்று கருதித் தீக்திறத்தா ரோடு சேர்த் தெண்ணப்பட்டு அங்கியங் கடவுளுக்கு இரையா வர் என்பதும் அவ் வேவல் மொழியின் உட்கோளாகும்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

பார்ப்பார் என்றும் அறவோர் என்றும் தனித்தனியாகக் கூறப் பட்டிருப்பதால் பார்ப்பார் வேறு அறவோர் வேறு என்று தெரி கிறது. அறவோரை அந்தணர் என்பர் திருவள்ளுவர். "அந்த ணர் என்போர் அறவோர்" என் பது அவர் பொய்யா மொழி. அக் குறளின் உரையில் பரிமே லழகர் 'அ ற வே ர்' என்ற சொல் லு க் குத் 'துறவறத்தில் நிற்பவர்' என்று விளக்கி யிருப்ப தால் மேற் காட்டிய ஏவல் மொழியில் குறிப்பிட்டிருக்கும் அறவோர் என்பவர் துறவிகள் என்றும் பார்ப்பார் என்பவர் மந்திர காரியங்களைப் பார்க்கும் கடப்பாட்டோடு இல்லற நெறி யில் நி ற் ப வ ர் எ ன் று ம் கொள்ளலாம்.

பார்ப்பார் அறவோர் பத்தி னிப் பெண்டிர் மூத்தோர் குழவி ஆகிய இவர்களைக் குறிப்பிட்டுப் பசுவையும் உடன் சேர்த்துக் கூறப்பட் டிருப்பதி லி ரு ந் து பசுவை எங்ஙனம் நம் முன்னோர் போற்றி வந்திருகின்றனர் என் பதை யறியலாம்.

சிற்றுயிர்களில் மிகச் சிறந்தது ஆனினம். தான் பெற்ற கன் றின்மீது தாய்ப்பசு அன் பு செலுத்துவது போல ஏனைய சிற்றுயிர்கள் தம் குட்டிகளின் மீது அன்பு செலுத்துவதில்லை. அன்பாற் கசிந் துருகுவதற்கு எடுத்துக் காட்டாகப் பசுவையே கூறுவர்.

இசையரங்கில் பா ட கர் "கன்றின் குரலைக் கேட்டு, கசிந்து வரும் பசுப் பா ல்" என்ற பாடலைப் பாடும்போது உருக்கத் தோடு கேட்டுக்கொண் டிருப்பர். ஆனால் அன்றாட வாழ்க்கையில் கன்றுக்கு உருகும் பசுவிடம் இரக்கங் கொள்ளாது கன்றைக் காட்டிக் காட்டிப் பால் முழு வதையும் கறந்து விற்றுவிடுவர். சில நாட்களில் பா ற் க ன் று யிருந்த அது தோற் கன்றாய் மாறும். பாற் கன்றுக்கு இரங் கிய அப் பசு தோற்கன்றுக்குப் இரங்கிப் பால் கொ டு க் கு ம். இப்படிச் சில ஆண்டுகள் கழிய அ ப் ப சு முதுமை யடையும். பணம் சேர்க்க வேண்டுமென்ற ஒரே நோக்கங் கொண்டவர் முன்னர்ப் பால் கொடுத்த உதவி யதை எண்ணிப் பார்ப்பாரோ? பாலுக்குப் பயன்படாத அதனை ஊனுக்காகக் கொன்று விடுவர்; அல்லது அத்தொழில் செய்வா ருக்கு விற்றுவிடுவர்.

ஒருயிருக்குந் தீங்கு செய்யா தது பசு. பயன் கருதாமல் தலைவனுக்கு உழைக்கும்; பால் கொடுக்கும். ஒரு பசுவைக் கொண்டே ஒரு குடும்பம் பிழைக்கலாம். இரண்டு காளை களைக் கொண்டு அளவாக நில மு டை யோர் பிழைக்கலாம். இவ்விதமாக மக்களுக்குப் பேருதவி செய்து வருமதனை ஊன் பொருட்டுக் கொல்வது மாபாவம். அந்தணர் வாழ வேண்டும் வானவர் வாழ வேண் டும என்றும் தம் திருப்பாசுரத் தில் வாழ்த்திக் கொண்டு வந்த ஆழ்வாரை யார் (சப்பந் தர்) அடுத்து ஆனினம் வாழ வேண்டும் என்று வாழ்த்தியிருக் கி ரு ர். இவை யனைத்தையும் எண்ணிப் பா ரா ம ல் ஊன் பொருட்டுப் பசுக் கொலை புரி வார் சம்பந்தர் போன்ற சான் றோர் உ ள் ள ம் வருந்துமாறு நடந்துகொண்டவராவர்.

கழிந்த காலம் போக, இனி யேனும் மக்கள் ஊன் பொருட்டு உயிர்க் கொலை புரியாமலும் உயிர்க் கொலைக்குக் காரணமா யிராமலும் திருந்திவர முயல் வார்களாக.

PHONE 55034 TEL: ENKAYAM
விசித்திர ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கற்பனை முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1

* என் அன்பே! *

(மா. கோவிந்தராஜன்)

மூர் மார்க்கெட்டின் பின் புறமாகச் சென்றால் காண வேண்டிய இடங்கள் பல உள்ளன. மூ தலில் நாம் காண்பது "அசோக் விகார்" எனப்படும் நிலையம். இந் நிலையம், சமூகத்திலே பின் தங்கிய மக்களுக்கு மருத்துவ உதவியும், பொழுது போக்குக்கான வசதியும் அளிக்கிறது. நம் நாட்டிலே வேறெங்கும் காணாத புதுமையான நிலையம் இது. இதற்கும் அப்பால் ஸ்டேடியம் ஒன்றுள்ளது. இவ்விடம் நீங்கி மேலே சென்றால் "மைலேடீஸ் கார்டன்" என்றழைக்கப்படும் தோட்டம் ஒன்றுள்ளது. இது பல்வகைப் பூஞ்செடிகள் வைத்து வளர்க்கப்படும் ஓர் அழகிய பூங்கா. இதற்குப் அடுத்தாற்போல்தான் மிருகக் காட்சிச் சாலையுள்ளது. அம் மிருகக் காட்சிச் சாலையைப் பற்றி நான் அதிகம் எழுதுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், இவ்விடத்தில் என் மனதைக் கவர்வது அங்குள்ள பசுமை மிகுந்த இயற்கை வனப்பும், சுற்றிலும் வளைந்து வளைந்து வரும் நீரோடையுமே.

பிறகு எழும்பூர் சென்றால் காணவேண்டிய இடங்கள் பல உள்ளன. முக்கியமாக அங்குள்ள பொருட் காட்சிச் சாலை நம் கண்ணையும் கருத்தையும் கவரக் கூடியது. அதனுள்ளே சென்றால் பண்டைய காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும்— நம் சிந்தனையை இழுத்துச் செல்லும் பல வகைக் கலைச் சின்னங்களைக் காண்பாய். வெவ்வேறு நாட்டினர், வெவ்வேறு காலத்தவர்கள், கையாண்ட கருவிகள், ஆயுதங்கள் அழகுப் பொருள்கள், அணிகலன்கள் முதலியவை உன் உள்ளத்தைக் கவரும். மேலும், அங்கே வைத்துக் காப்பாற்றப் பட்டு வரும் தாவர வகைச் சின்னங்கள், மிருக, மனித வர்க்கத்தின் உடற் சின்னங்கள் முதலியவை இயற்கைப் படைப்பின் இரகசியங்கள் பேசும். மேலும், அவ்விடத்திற்கு அழகு செய்யும் நிலைகளைக் காணின் அவை, கருங்கல்லில் அழியா அழகை வடித்துக் கொடுத்த சிற்பிகளின் கைத் திறத்தையும் கற்பனை உயர்வையும், உன்னிடம் மௌனமாகப் பேசும். இன்னும் ஓவியங்கள் பலவும் அவ்விடத்தை அழகு செய்கின்றன. அவற்றிலே காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஓவியம் ஒன்றுள்ளது. அதுதான் ரவி வர்மா தீட்டிய சகுந்தலையின் ஓவியம். காதலனைப் பிரிந்த அக்கட்டழகி ஒரு மரத்தினடியில், ஏக்கம் நிறைந்த நோக்குடனே அமர்ந்திருப்பது நம் சிந்தையைக் கவரும். அடுத்தபடியாக, யாவற்றுக்கும் சிகரமாய் அமைந்த, செம்பிலே வடித்தெடுத்த நடராஜர் சிலையைக் கண்டால் அவ்விடத்தை விட்டு நகர உனக்கு மனம் வராது. அச் சிலையின் அழகை, தாமரை மொட்டைப் போன்ற அந்த எழில் முகத்தை, அம் முகத்திலே தவழும் புன் சிரிப்பின் அழகை இக் கடிதத்திலே எழுதுவது என்னால் இயலாத செயல். அதைக் கண்டுதான் களிக்கலாமே தவிர எடுத்துச் சொல்ல இயலாது. ஆனாலும் அதைப் பற்றிச் சற்றே விரிவாக எழுதாமல் இருக்கவும் என்னால் இயலவில்லை. அந்த அதரங்கள் அமைந்த அழகை நான் என்னென்பேன்! அதிலே தவழும் புன் சிரிப்பை, மோகன முறுவலை, அதரங்கள் விரியா அழகு சிரிப்பை, அழகிய தாமரை மொட்டு முதன் முதலில் காலைக் கதிரவனைக் கண்டு சற்றே இதழ் விரித்து நகைப்பதே போன்ற அக் குறு நகையை நான் என்னென்பேன்!

பிரிய மனமின்றி அவ்விடத்தை விட்டுப் பிரிந்து பக்கத்திலுள்ள கன்னிமரா நூல் நிலையத்திற்குச் சென்றால் அங்கே சிந்தனைச் சிற்பிகள் பலரின் கலை உள்ளத்துடன் உறவாடலாம். பல் வேறு நாட்டுப் பெரியோர், சிந்தனைச் செல்வர்களின் எண்ணங்களின் வடிவால் வெளி வந்துள்ள நூல்கள் பல கொண்ட அந் நிலயத்தைப் பல வண்ண மலர்களினின்றும் சேகரித்த தேன் நிறைந்த தேன் கூடு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந் நிலயத்தை யொட்டிப் பிறை மதி வடிவில் அமைந்துள்ள கட்டிடந்தான் "மியூஸியம் தியேட்டர்" எனப்படும் கலைக்கூடம். இவ் வழகிய கூடத்திலே இசை, நாடகம், நடனம் முதலிய கலை விருந்துகள் பல அடிக்கடி நிகழும்.

இவ் வீதியிலே சற்றுத் தென் புறம் சென்றால் பிரசவ ஆஸ்பத்திரி ஒன்றைக் காண்பாய். அரசாங்கத்தால் நடத்தப்படும் இம் மருத்துவ நிலையம் இந் நகரில் வாழும் பெண்குலத்திற்குப் பெருஞ் சேவை செய்கிறது.

பக்கத்திலுள்ள வீதி வழிச் சென்றால் பல்கலை வளர்க்கும்

வாலொலி நிலையத்தைக் காண்கிறோம். உலகம் முழுதும் நிகழும் நிகழ்ச்சிகளை, பாவும் செய்திகளைச் சேகரித்து நாட்டிற்கு வழங்குகிறது இந் நிலையம். இங்ஙனம், உலகம் முழுதையும் வானத்தின் மூலம் ஒன்று படுத்தும் ஒலிச் சங்கிலியின் பல கணைகளுள் இதுவும் ஒன்றாய்த் திகழ்கின்றது.

அடுத்தபடியாகத் தேனும் பேட்டை சென்றால் அங்குள்ள தாவர வகைத் தோட்ட மொன்றைக் காண்பாய். விதவிதமான செடிகள், கொடிகள், மரங்கள் நிறைந்த அத் தோட்டமானது தாவர உலகின் இரகசியங்கள், அற்புதங்கள், உண்மைகள் பலவற்றை மனிதனின் ஆராயும் அறிவுக்குத் திறந்து காட்டுகிறது. ஆனால், நம்மைப் போன்ற சாதாரண மக்களுக்கு அப்படி ஒன்றும் தெரியாது. ஆகவே, அத் தோட்டத்தின் இயற்கை வனப்பை மட்டும் அனுபவித்து விட்டு மேலே செல்ல வேண்டியதுதான்.

இத் தோட்டத்தின் எதிர்ப்புறத்தில் இந்தியாவிலேயே உயர்ந்தது எனச் சிறப்புப் பெற்றுள்ள ஜெமினி ஸ்டுடியோவைக் காண்கிறோம்.

பிறகு அங்கிருந்து கிழக்கு நோக்கி விரியும் வீதிதான் சென்னையிலேயே செம்மையான பகுதியாய்க் கருதப் படும் மவுண்ட்ரோடு. இவ் வீதி வழிச் செல்லச் செல்ல இதன் அழகு வளர்கிறது. ஆகா! இவ் வீதியின் அழகை என்னென்று எழுதுவேன். படமெடுத்து வடித்தெடுக்க வேண்டிய அவ்விடத்தின் அழகைச் சொல்லிலே சிறை செய்ய முடியுமா? ஆயினும், முயல்கிறேன்.

வீதியின் இரு மருங்கிலும் உள்ள நடை பாதையில் சாரி சாரியாய் மக்கள் நடமாட, ஆங்கில அழகிகள் தத்தம் காதலர்களுடன் கை கோத்துச் செல்ல, பார்சி மகளிர், பாஞ் சாலப் பெண்கள், சுத்தம் ஆடவர்களோடு ஒயிலுடன் நடமாட, தமிழ்ப் பெண்டிர் தங்கள் தலைவர்களுடன் முன் பின்னும் அழகுறச் செல்ல, மேலே அணி அணியாய் நிற்கும் மின் விளக்குகள் நீல ஒளி பெருக்க, அதன் கீழே, அந் நீல ஒளிப் பெருக்கிலே வழவழப்பான கார் வீதி பளபளக்க, அதிலே வகை வகையான கார்கள் பல தவழ்ந்து ஓட எழில் நிரம்பி விளங்கும் அக் காட்சியானது அழகிய வர்ண ஓவியம் ஒன்று உயிர் பெற்று நம் முன்னே இயங்குவதே போலத் தோன்றும்.

அடுத்தாற்போல் அவ்விடத்திற்குச் சிறப்புச் செய்கின்றன அங்குள்ள சினிமா தியேட்டர்கள். சென்னையிலுள்ள தியேட்டர்களுள் அழகிய தியேட்டர்கள் யாவும் இங்குத்தான் உள்ளன. ஆங்கிலப் படங்கள் ஓடும் தியேட்டர்களும் இங்கு அதிகம். இங்கு ஓடும் படங்களுள் என் சிந்தையைக் கவர்வது, சிந்தனையைக் கிளர்வது ஆங்கிலப் படங்களே. வாழ்க்கையைப் புதுமை நோக்குடன் காணச் செய்கின்றன இத்தகைய படங்கள். மேலும், இவை ஆங்கில, அமெரிக்க மக்களின் பண்பையும், வாழ்க்கைப் போக்கையும், அவர்களின் எண்ணங்களையும் நமக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடியாய் அமைகின்றன.

(வரும்)

———

குருகுல் - - - வெளியீடுகள்

1. ஒளி வழிபாடு
விலை அணா 6.

2. திருமூலர் அருள்மொழிகள்
விலை அணா 4.

3. தணிகைமலை அல்லது அமைதி
விலை அணா 6.

4. நல் வாழ்க்கை
விலை அணா 1.

5. திருக்கழுக்குன்றப் பதிக விளக்கம்
விலை அணா 1.

6. கருக் கலை
விலை அணா

7. மூன்று உண்மைகள்
விலை அணா 3.

8. இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்
விலை அணா 9.

9. முல்லைப்பாட்டு அகராதி
விலை அணா

10. திருமுருகாற்றுப்படை அகராதி
விலை அணா 8.

11. தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்
விலை ரூ. 1.

12. ஆத்திசூடி - கருத்துரை
விலை 0-0-3.

மேற்படி அனைத்தும் கட்டு 1-2-0.

கிடைக்கும் இடம்:

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம், P.O., (S. I. R.)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; கி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)